பக்கங்கள் 18 + 04

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 09 வெள்ளிக்கிழமை 23.05.2024 | அதிர்வு 293

## கொழும்பில் எங்கள் ஆட்சி

**சஜித் அணி தம்பட்டம்**



“கொழும்பு மாநகர சபையின் ஆட்சியை அரசுக்கு வழங்கப் போவதில்லை.

04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்







# வடக்கு, கிழக்கு காணிப் பிணக்கு: பிரதமர் தலைமையில் கலந்தாய்வு

(ந.லோகதயாளன்)

வடக்கு, கிழக்கு காணிப் பிணக்கு தொடர்பான கூட்டம் பிரதமர் ஹறிணி அமரதுங்க தலைமையில் இன்று முற்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இந்த விசேட கூட்டத்தில் விவசாய அமைச்சர் லால் காந்த, சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(மேலதிக படங்கள் 2 ஆம் பக்கத்தில்)

# தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கி: முன்னாள் அமைச்சர் துமிந்த கைது!

**கொழும்பில் தங்கமுலாம் பூசப்பட்ட துப்பாக்கி கைப்பற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளருமான துமிந்த திஸாநாயக்க இன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

**திம்பிரிகஸ்யாயவில் உள்ள சொகுசு தொடர்மாடி**

04





# பொலிஸ் நிலையத்துக்குள் குழப்பம்: அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் கைது!



மட்டக்களப்பு மங்களாராம விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் இன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை, உஹன பொலிஸ் நிலையத்தில் குழப்பம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்ட சம்பவத்தையடுத்து இந்தக் கைதுநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது.

உஹன பொலிஸாரால் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டபோது, அவருடன் இருந்த இரண்டு பிள்ளைகளைப் பாதுகாப்பற்ற முறையில் ஓட்டோவில் அழைத்துச் செல்ல முயன்றதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தேரர் அந்தப் பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்து குழப்பம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டார் என்று தெரிவிக்கப்படும் காணொளி ஒன்றும் சமூக வலைத்தளத்தில் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வடக்கு, கிழக்கு காணிப் பிணக்கு: பிரதமர் தலைமையில் கலந்தாய்வு























# பிரதமர் - அமெரிக்கத் தூதுவர் சந்திப்பு

பிரதமர் ஹறிணி அமரசூரியவுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கும் இடையிலான சந்திப்பு நாடாளுமன்ற வளாகத்தில் இடம் பெற்றது.

இலங்கைக்கு அமெரிக்க வெளிநாட்டு உதவிகளை வழங்குவதற்கான வழிமுறைகள் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான நிலைபேறான ஒத்துழைப்புக்கு பங்களிக்கும் வழிகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அமெரிக்க திறைசேரித் திணைக்களத்தின் விரிவான மீளாய்வுக்காக காத்திருக்கும், வெளிநாட்டு உதவிகளுக்கு அண்மையில் மூன்று மாதங்களாகத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பது குறித்து பிரதமரிடம் பிரதிநிதிகள் குழு விளக்கியது.

முக்கிய அபிவிருத்தித் திட்டங்களில், குறிப்பாக பெண்களுக்கான பாதுகாப்பான வீட்டுவசதித் திட்டத்தில் ஏற்படும் தாக்கம் மற்றும் ஆதரவு பொறிமுறை சீர்குலைவதால் ஏற்படக்கூடிய பரந்த மனிதாபிமான பிரச்சினைகளுக்கான சாத்தியமான தீர்வுகள் குறித்து இந்தக் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது. அபிவிருத்தியில் உலகளாவிய அளவில் அமெரிக்காவின் முக்கிய பங்கு மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பைத் தொடர்வதன் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கையின் அபிவிருத்தி முன்னுரிமைகளுக்குத் தொடர்ந்து ஆதரவை வழங்குவதற்கான மாற்று வழிகளை அடையாளம் காண அமெரிக்கா மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறித்து பிரதமர் சிறப்பு கவனம் செலுத்தினார்.

பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதிலும், நாட்டின் நீண்ட கால அபிவிருத்தித் திட்டத்தை ஆதரிப்பதிலும் அமெரிக்கா விதித்துள்ள வரிகளின் தாக்கம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் யு.எஸ்.ஏ.ஐ.டி. இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான செயற்றிட்டப் பணிப்பாளரும் திட்ட அலுவலகப் பணிப்பாளருமான மௌரீன் ஹ்சியா, பாதிக்கப்படக்கூடிய மக்கள் பிரிவு தொடர்பான அலுவலகத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் ஏஞ்சலினா ஹெர்மன், பொருளாதார அபிவிருத்தி அலுவலகத்தின் திட்ட முகாமைத்துவ நிபுணர் நிர்மி விதாரண, பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த மற்றும் வெளியுறவு அமைச்சின் வட அமெரிக்கப் பிரிவின் பணிப்பாளர் பிரமுதித முனசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.












# உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுடன் வடக்கு ஆளுநர் வேதநாயகன் கலந்துரையாடல்

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கும் இடையிலான மே மாதத்துக்குரிய கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

உள்ளூராட்சி மன்றங்களை தமது சேவைகளை வினைத்திறனாக முன்னெடுக்குமாறும், மக்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய நிறுவனமாக மாற்றும் வகையில் செயலாற்றுமாறும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

தெருமின்விளக்குகள் பொருத்துவதில் இலங்கை மின்சார சபையுடன் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உள்ள இடர்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இதன் பின்னர் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தினதும் முன்னேற்றங்கள் தனித்தனியாக ஆராயப்பட்டன. அதில் உள்ள சவால்களை தீர்ப்பது தொடர்பான கலந்துரையாடல்களும் நடைபெற்றன. உள்ளூராட்சி மன்றங்களின் வருமானத்திலேயே பணியாளர்களுக்கான சம்பளம் வழங்குவதில் உள்ள சிக்கல்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள பணியாளர்கள் வெற்றிடம், இடமாற்றங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், யாழ். மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செய லாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.







## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடியிருப்பில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.கொழும்பு, வெள்ளவத்தை – ஹவலொக் சிட்டி பகுதியில் உள்ள ஆடம்பர குடியிருப்புத் தொகுதியில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட ரி – 56 ரக துப்பாக்கி தொடர்பில் 40 மற்றும் 68 வயதுடைய இரண்டு பெண்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பான விசாரணைகள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிரணிகளின் ஒத்துழைப்புடன் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியே மலரும்.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

” கொழும்பு மாநகர சபை தொடர்பில் கட்சிகளுடன் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றோம். பல கட்சிகள் எமக்கு ஆதரவு வழங்கியுள்ளன. எனவே, கொழும்பில் ஆட்சியை அரசு இழக்கும்.

அரசுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்த சில சுயாதீனக் குழுக்கள் எம்மையும் சந்தித்துள்ளன. எனவே, ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலேயே கொழும்பு மாநகரில் ஆட்சி அமையும். ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவரே மேயர் வேட்பாளராக நிறுத்தப்படுவார். ஏனைய கட்சிகளுக்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். உரிய வகையில் சரியான முடிவு எடுக்கப்படும்.” – என்றார்.



# ஆள்களைக் கழுத்தோடு வெட்டுவதைப் போல் வீதிகளில் மரங்களை வெட்டிச் சாய்க்கின்றனர்

## வடக்கு ஆளுநர் கவலையுடன் தெரிவிப்பு

"ஆள்களைக் கழுத்தோடு வெட்டுவதைப் போன்று வீதிகளில் வளர்ந்துள்ள மரங்களை வெட்டுகின்றார்கள். அந்த மரங்களை வளர்ப்பதற்கு எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டிருப்பார்கள் என்பதைப் பற்றிச் சிந்திக்காமல் இவ்வாறு அசிரத்தையாகச் செயற்படுகின்றனர்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மரம் நடுகை தொடர்பான கலந்துரையாடல் ஆளுநர் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மின்சார சபையின் மின்வடங்களுக்கு பாதிப்பு எனத் தெரிவித்து மரங்கள் மற்றும் மரக்கிளைகள் மிக மோசமான முறையில் வெட்டப்படுகின்றமை தொடர்பிலும், அந்தக் குப்பைகள் வீதிகளில் வீசப்படுகின்றமை தொடர்பாகவும் ஆளுநருக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டது. அத்துடன் ரயில்வே திணைக்களத்தால் தென்மராட்சி பிரதேசத்தில் நடுகை செய்யப்பட்ட மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டமை தொடர்பாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இதன்போது இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப்பொது முகாமையாளர் எஸ்.பிரபாகரன், தடையற்ற மின்சாரத்தை வழங்கும்நோக்கில் மின்வடங்களுக்கு பாதிப்பு ஏற்படும் எனக் கருதும் மரங்கள் அல்லது மரக்கிளைகளே வெட்டப்படுகின்றன எனக் குறிப்பிட்டார். இதன்போது ஒப்பந்தகாரர்கள் வெட்டுகின்ற மரங்களை வீதிகளிலேயே போட்டுவிட்டுச் செல்கின்றமை உள்ளிட்ட பல பிரச்சினைகள் இருக்கின்ற என்பதை ஏற்றுக்கொண்டார். அத்துடன் இதனை முகாமை செய்வதிலும் சில இடர்பாடுகள் இருக்கின்றன எனவும் ஒப்புக்கொண்டார்.

மாரி காலத்தை அண்மித்தே மக்கள் மரங்களை வெட்டுவது வழக்கம் எனவும், ஆனால் ஒப்பந்தகாரர்கள் கோடை காலத்திலும் மரங்களை வெட்டுகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்குப் பதிலளித்த பிரதிப்பொது முகாமையாளர், வருடத்தின் 4 தடவைகள் இந்த மரங்கள் அல்லது கிளைகளை வெட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார். மின்வடங்களின் பாதுகாப்புக்கே முக்கியத்துவம் கொடுப்பதாகவும் தெரிவித்தார். தற்போது மின்வடங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் மரங்களை நடுகை செய்வதற்கு அனுமதிப்பதில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இந்த ஒப்பந்தப் பணிகளுக்குரியவர்கள் இங்கு இல்லை என பிரதிப் பொதுமுகாமையாளர் குறிப்பிட்டார். எனவே, மரங்களை அதற்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வெட்டுவதற்குரிய ஆளணியினரை இங்கு உருவாக்கி எதிர்காலத்தில் அவர்கள் ஊடாக அதனைச் செய்வதற்கான யோசனையை தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் முன்வைத்தார்.

இதேவேளை, ரயில்வே திணைக்களம் தமது ரயில் பாதைகளிலிருந்து 30 அடிக்குள் மரங்கள் நடுகை செய்யக்கூடாது என்ற ஏற்பாடுகள் உள்ளது எனச் சுட்டிக்காட்டினர். தென்மராட்சியில் தமது அனுமதி பெறாமலே நடுகை செய்யப்பட்டது எனக் குறிப்பிட்டனர். தற்போது அனுமதி பெறாமல் யாராவது நடுகை செய்தால் அதனை பக்குவமாக அகற்றி வேறு இடங்களில் நடுகை செய்ய வழங்குவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். ரயில் பாதைகளுக்குள் நடுகை செய்யக் கூடாது என்ற விடயத்தை மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

மேலும், வடக்கு மாகாணத்தில் மரம் நடுகையை அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் முன்னெடுக்கவேண்டும் என அறிவுறுத்திய ஆளுநர், அதனை தன்னார்வமாக முன்னெடுக்கும் நிறுவனங்களைத் தொடர்புகொண்டு செயற்படுத்துமாறு பணித்தார்.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், யாழ். மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் மற்றும் வடக்கு மாகாணத்தில் தன்னார்வமாக மரம் நடுகையை முன்னெடுக்கும், கிறீன் லேயர் அமைப்பின் நிறுவுனர் பா.சசிக்குமார், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# தயாசிறியின் நடத்தை தொடர்பில் ஆராய மூவரடங்கிய விசாரணைக் குழு நியமிப்பு

## சபையில் சபாநாயகர் அறிவிப்பு



நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் நடத்தை தொடர்பாகக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுக்க மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்நிலையில், குழுக்களின் பிரதித் தலைவர் ஹேமாலி வீரசேகரவின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் குழுவில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக ஆகியோரும் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“அரசு இவ்வாறு விசாரணைக் குழுக்களை அமைக்குமாக இருந்தால் அதனை முன்மாதிரியாகக் கொண்டு எதிர்க்கட்சிகளும் முறைப்பாடுகளைச் செய்து விசாரணைக் குழுக்களை நியமிக்க வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.” – என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக, சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இன்று கூடிய அமர்வின்போது சபைக்கு அறிவிப்பை விடுத்த சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன,

“2025.05.20ஆம் திகதியன்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபையில் நடந்துகொண்ட விதம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டைக் கருத்தில்கொண்டு அது தொடர்பில் விசாரணை செய்து அறிக்கையை முன்வைப்பதற்காக பிரதி குழுக்களின் தலைவர் ஹேமாலி வீரசேகரவின் தலைமையில் அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக ஆகியோரை உள்ளடக்கிய மூன்று பேர் கொண்ட குழு என்னால் நியமிக்கப்பட்டுள்ளது.” – என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக, “சபையில் தயாசிறி ஜயசேகரவின் செயற்பாடு தொடர்பில் கிடைத்த முறைப்பாடு தொடர்பாக குழுவொன்றை அமைத்துள்ளதாகச் சபாநாயகர் கூறியுள்ளார். ஆனால், அந்தக் குழுவில் எனது பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த விடயம் தொடர்பில் எனக்குத் தெளிவு இல்லாமல் இருக்கின்றது.” – என்றார்.

இதன்போது சபைக்குத் தலைமை தாங்கிய சபாநாயகர், “நிலையியல் கட்டளை 139 மற்றும் 149 ஆகிய பிரிவுகளின் பிரகாரம் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. நிலையியல் கட்டளைக்கு அமைவாகவே செயற்பட்டுள்ளேன். ஆகவே, அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.” – என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய கயந்த கருணாதிலக,

“இதனை முன்மாதிரியாகக் கொண்டு அரசால் இவ்வாறு குழுக்கள் நியமிக்கப்படுவதைப் போன்று எதிர்க்கட்சியும் எல்லாவற்றுக்கும் முறைப்பாடுகளைச் செய்ய நேரிடும்.

அதற்காகக் குழுக்களையும் நியமிக்க நேரிடலாம். அத்துடன் எதிர்க்கட்சியில் குழுக்களுக்காகப் பிரதிநிதிகளை நியமிக்கும்போது எதிர்க்கட்சித் தலைவரிடமோ, எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திலோ ஆலோசிக்குமாறு கோருகின்றோம்.” – என்றார்.





# வெலிக்கந்தையில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு

(எம் எப். நவாஸ்)

வெலிக்கந்தை பிரதேச செயலகத்தில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் இரத்ததானம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வானது வெலிக்கந்தை பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பான் வழிகாட்டலில் இன்று (23) இடம்பெற்றது.

இதன் போது வைத்தியர்கள், தாதிய உத்யோகத்தர்கள் மற்றும் இரத்த தானம் வழங்கும் முகமாக செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீண்டும் கொவிட் பீதி!

இலங்கை உட்பட உலக நாடுகளில் 2020 இல் கொரோனாத் தொற்று ஏற்படுத்திய தாக்கமும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகள், இழப்புகள் போன்றவையும் இலகுவில் மறந்து விடக்கூடியவை அல்ல. பல கோடிப் பேருக்கு நேரடிப் பாதிப்பை ஏற்படுத்திய இத்தொற்று கோடிக்கும் அதிகமானோரின் உயிர்களைக் காவு கொண்டது என பிந்திய புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. பல நாடுகளை, பிரதேசங்களை நீண்ட காலம் முடக்க வேண்டிய நெருக்கடியை - கட்டாயத்தை - ஏற்படுத்திய இந்தக் கொவிட் தொற்றினால் உலக நாடுகளின் பொருளாதாரமே சரிந்தது. அதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. நமது நாட்டின் பொருளாதாரச் சீரழிவு வெளிப்படையாக நாட்டைத் தாக்க முற்பட்டதே அந்த தொற்றை அடுத்து நாட்டை முடக்கியமைத் தொடர்ந்துதான் என்பதையும் மறந்து விட முடியாது.

கடந்த சில வாரங்களாக மீண்டும் கொவிட்-19 பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பல ஆசிய நாடுகளில் அதிகரித்து வருவதான செய்திகள் ஊடகங்களில் வெளியாகி வருகின்றமை மீண்டும் பீதியைக் கிளப்பும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளன.

ஆனால், மக்கள் அஞ்சும் நெருக்கடி நிலை இலங்கையில் இல்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இலங்கையில் புதிய கொவிட்-19 திரிவுகள் தொடர்பில் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. தொற்றுநோயியல் பிரிவின் தரவுகளின் அடிப்படையில் புதிய திரிவுகள் எதுவும் கண்டறியப்படவில்லை என சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய கொவிட்-19 திரிவு பரவும் அபாயம் இல்லாததால் மக்கள் அச்சம் கொள்ள அவசியமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

''இது விடயத்தில் தேசிய அளவில் தயார்படுத்தவும், பொது சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் தேவையான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சகம் எடுத்துள்ளது. நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளில் கொவிட் – 19 இற்கான மருத்துவ மாதிரிகளை சோதிக்கும் ஒருங்கிணைந்த சுவாசக் கண்காணிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும் தற்போதைய அவதானிப்பின்படி, கொவிட்-19 பாதிப்புகளில் அதிகரிப்புகள் எதுவும் இல்லை. இலங்கையில் தொற்றுநோய் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளை முன்கூட்டியே அடையாளம் காணத் தேவையான ஆய்வகக் கண்காணிப்பு அமைப்பும் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றது.'' - என்று அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

மற்ற சுவாச நோய்களைப் போலவே அவ்வப்போது கொவிட்-19 அதிகரிக்கக்கூடும். பொதுமக்களுக்கு இதனால் எவ்வித ஆபத்தும் இல்லை. இருப்பினும், வயதானவர்கள், பலவீனமான நோயெதிர்ப்பு உள்ளவர்கள் மற்றும் நாள்பட்ட நோய்கள் உள்ளவர்கள் போன்றோர் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளமையால் அத்தகையோர் குறித்து சிறப்பு கவனம் செலுத்துவது முக்கியம் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னைய கொவிட் தொற்றுக் காலத்தில்நாட்டில்கணிசமானோருக்கு தொற்றுத் தடுப்பு ஊசிகள் ஏற்றப்பட்டன. நேரடிப் பாதிப்புகள், தாக்கத்தை ஏற்படுத்தும் புதிய வைரஸ் திரிவுகள் பரவாத வரையில் மீண்டும் பெருந்தொல்லை ஏற்படாது என நம்பலாம். ஆயினும் சமூகம் எப்போதுமே முன்னெச்சரிக்கையாக இருப்பது சிறந்தது.



# திருக்கோவில் நவதள இராஜகோபுர 4 ஆம் தளத்துக்கு அடிக்கல் நடல்!

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கிலங்கையின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் 108 அடி உயர நவதள இராஜகோபுரத்தின் நான்காம் தளத்துக்கான அடிக்கல் நாடும் விழா ஆலய பரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையில் நேற்று நடைபெற்றது.

முருகப்பெருமான் அருளால் இந்திய சுவாமி ராமானந்த சரஸ்வதி திருக்கோவிலுக்கு வருகைதந்து இந்தப் பணிக்கு நிதியுதவி நல்கினார்.

அவரது உபயத்தில் இந்த நான்காவது தளம் அமைக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் எழுப்பப்படும் மிக உயர்ந்த முதலாவது நவதள இராஜகோபுரம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

பல வருடங்களாக தடைபட்டிருந்த அமைப்பு திருப்பணி வேலைகள் தற்போது தொடர்ச்சியாக நடைபெறுகிறது.

பண்டைய காலத்தில் இராஜராஜ சோழனால் இந்த ஆலயம் அமைக்கப் பட்டதாக கூறப்படுகிறது.

முன்னொரு காலத்தில் "கந்த பாணத்துறை" என அழைக்கப்பட்டு, சங்ககாலம் மருவிய பின்பு திருக்கோவில் என அழைக்கப்பட்டது.

ஆலயத்தின் மூலப்பொருளான 108 அடி உயரமான 9 தளங்களுடன் கூடிய இராஜகோபுரம் அடித்தளம் இட்டு இதுவரை காலமும் முற்றுப் பெறாத நிலையில் 33 அடி உயரத்தில் காணப் பட்டது.

அதனை நிவர்த்தி செய்யும் முகமாக அடுத்த கட்ட திருப்பணியை ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையிலான பரிபாலன சபையினர் கூட்டம் கூடி அடுத்த கட்ட நகர்வை முன்னெடுத்திருந்தனர்.

அடிக்கல் நடும் வேலைகளை தொடங்கும் கிரியைகளை ஆலய குரு சிவஸ்ரீ அங்குசநாதக் குருக்கள் நடத்தினார்.

தொடர்ந்து ஆலயத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் மற்றும் வண்ணக்கர் வ.ஜெயந்தன், செயலாளர் கே. செல்வராசா உள்ளிட்ட பரிபாலன சபையினர் கூடி திருப்பணி வேலைகளை ஆரம்பித்தனர்.











# தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு கல்முனை பகுதியில் பரிசோதனைகள்!

**(பாறுக் ஷிஹான்)**

சுகாதார அமைச்சால் அம்பாறை மாவட்டத்தில் இனங்காணப்பட்ட பகுதிகளில் பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்புடன் டெங்கு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

தேசிய டெங்குவாரத்தை முன்னிட்டு 3 நாள்களாக கல்முனை பிராந்திய சுகாதார சேவை திணைக்கள பணிப்பாளர் வழிகாட்டலின் கீழ் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட சுகாதாரப் பிரிவில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி எஸ்.எப்.இஸற்.சராப்டீன் தலைமையில் இந்த டெங்கு பரிசோதனைகள் வீடுகள், வடிகான்கள், பொது இடங்கள் போன்றவற்றில் மேற்கொளளப்பட்டன.

டெங்குக் குடம்பிகள் இனங்காணப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது. மேலும் இதன்போது வீடுகள், பாடசாலைகள், உள்ளிட்ட அனைத்து சுற்றுப்புறங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலையிலும் பொதுச் சுகாதார பரிசோதரர்கள், சுற்றாடல் பிரிவின் பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர் எனப் பலரும் இந்தப் பரிசோதனை கலந்து கொண்டனர்.






# குண்டும், குழியுமாக மாறியுள்ள வீதிகள் நடவடிக்கை எடுக்கக் கோரும் மக்கள்!

(நூருல் ஹுதா உமர்)

பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மாளிகைக்காடு மீன் சந்தைக்கு செல்லும் மாளிகா வீதியின் மாளிகா சந்தி, கல்முனை மாநகரத்தில் அதிக சனத்தொகை நடமாட்டமுள்ள வீதிகளில் ஒன்றான வைத்தியசாலை வீதி போன்ற முக்கியமான வீதிகளில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை திருத்தப் பணிகளை செய்து முடித்துவிட்டு வீதிகளை முறையாக செப்பனிடாமல் சென்றதால் அப்பிரதேச மக்களும், பாதசாரிகளும் பலத்த அசௌகரியங்களை தினம் தினம் எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதிகளை முறையாகச் செப்பனிடுமாறு பொது மக்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகள், ஊழியர்களுக்குத் தெரிவித்த போதும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது என்று மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான இந்த வீதிகளைக் கடந்த காலங்களில் இருந்த அரசுகள் காப்பெட் வீதியாகச் சீரமைத்து மக்கள் பாவனைக்கு வழங்கியிருந்த போதிலும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் இவ்வாறான செயல்களால் மழை காலங்களில் பொதுமக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. வடிகான்கள் கூட மண்களால் நிரப்பப்பட்டு வெள்ள நீர் வடிந்தோட முடியாத நிலையும் சில இடங்களில் உள்ளது.

இந்த விடயத்தில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகள் துரிதகதியில் கவனம் செலுத்தி வீதிகளை மக்கள் பாவனைக்கு உகந்த வகையில் திருத்தி அமைத்து தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.





# மட்டக்களப்பில் டெங்கு பரவக் கூடிய இடங்களில் விசேட நடவடிக்கைகள்!

(பழுவூரான்)

சுகாதார அமைச்சால் நாடளாவிய ரீதியில் டெங்கு பரிசோதனை வார செயற்றிட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட இனங்காணப்பட்ட இடங்களில் விசேட டெங்கு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு சுகாதாரசேவை பிரிவுக்கு உட்பட்ட நாவற்குடா பகுதியில் அண்மையில் ஒரு டெங்கு நோயாளி இனம் காணப்பட்டதையடுத்து விசேட பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது இரண்டு வீடுகளில் டெங்குக் குடம்பிகள் இனம் காணப்பட்டதை அடுத்து அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் ஆர். முரளீஸ்வரனின் வழிகாட்டலின் கீழ் இந்தச் செயற்றிட்டம் மாவட்ட தொற்றா நோய்கள் பிரிவின் வைத்திய அதிகாரி எஸ். உதயகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த டெங்கு பரிசோதனைகளின் போது வீடுகள், வடிகான்கள், பொது இடங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்தப் பரிசோதனையில் பொதுச் சுகாதாரப் பரிசோதரர்கள், சுற்றாடல் பிரிவின் பொலிஸ் அதிகாரிகள், விமானப்படையினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பஸ்ஸின் பின்பக்கமாக மோதிய கார் விபத்தில் படுகாயமடைந்தார் சாரதி!



(உடப்பு க.மகாதேவன்)

புத்தளம் – கொழும்பு பிரதான வீதியில் மதுரங்குளி மங்கள எளிய பகுதியில் நேற்று (22) இடம்பெற்ற வாகன விபத்தில் காரின் சாரதி காயமேற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று மதுரங்குளிய பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் கொழும்பு வீதியில் பயணிக்கும் பயணிகள் பஸ்ஸின் பின் பக்கமாக வந்த மோட்டார் கார் மோதியதில் இந்த பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பல்துறைசார் சர்வதேச ஆய்வு மாநாடு!

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீட முதுகலைப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு நாள்களைக் கொண்ட "டிஜிட்டல் சமத்துவமின்மை மற்றும் சமூக அடுக்குப்படுத்தல்" எனும் தொனிப் பொருளில் சர்வதேச ஆய்வு மாநாடு இரு தினங்கள் பல்கலைக் கழகத்தின் கல்கிஸையில் அமைந்துள்ள கல்வி திட்ட நிலையத்தில் கலை மற்றும் கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் மற்றும் முதுகலைப் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் எம்.ஐ.எம். கலீல் ஆகியோரது இணைத் தலைமையில் இடம்பெற்றது.

அங்குரார்ப்பண நிகழ்வின் தொடக்கத்தில், கலாநிதி எம். றிஸ்வான் வரவேற்புரை நிகழ்த்தினார். இதையடுத்து இந்தியாவின் சென்னை குருநானக் கல்லூரியின் சமூகவியல் துறை உதவி பேராசிரியர் கலாநிதி வேணட் ராஜதுரை ஆரம்ப உரை நிகழ்த்தினார். தொடர்ந்து, மேற்கு வங்காளத்தின் டார்ஜிலிங் நகரில் உள்ள சௌத் பீல்டு கல்லூரியின் முதல்வர் கலாநிதி அனுராதா ராய் கௌரவ அதிதி உரை நிகழ்த்தினார்.

ஆய்வரங்கத்தில் கலை மற்றும் கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தன்னுடைய உரையில், சமூகத்திலுள்ள டிஜிட்டல் பாகுபாடு, கல்வி மற்றும் தொழில்நுட்பத்திற்கான சம வாய்ப்பின்மை ஆகியவை தொடர்ந்து சமூக அடுக்கமைப்பை உருவாக்கும் மிகப்பெரிய காரணிகளாக உள்ளன எனக் கூறினார். இத்தகைய சிக்கல்களை அணுகுவதற்காக பல்துறை ஆய்வுகள் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வின் புவியியல் துறையின் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கே. நிஜாமிர் பிரதான பேச்சாளரை அறிமுகப்படுத்தினார். அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த போர் மற்றும் சமூகப் பேராசிரியரும் வரலாற்றுத் துறை பேராசிரியருமான பேராசிரியர் டாக்டர் எம்மானுவேல் ஹைச்.பி.எம். கிரெய்க், டிஜிட்டல் பிரிவு மற்றும் அதன் காரணமாக ஏற்படும் சமூக அடுக்குக் குறித்தும், இந்தப் பிரச்சினைகள் சமூகத்தின் அனைத்து துறைகளிலும் எதிரொலிப்பதாகவும், சமூக மற்றும் வரலாற்றுப் பின்னணியில் இந்தப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வது மிகவும் அவசியம் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு, பல்துறை சார்ந்த கல்வி மற்றும் ஆராய்ச்சி முயற்சிகள், உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் திறனுடன் இணைக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அம்சமாக அமைந்தது.

இந்த மாநாட்டில் இலங்கையின் பல முக்கியமான பல்கலைக்கழகங்களான கொழும்புப் பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம், பேராதெனிய பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட கல்வியாளர்கள், ஆய்வாளர்கள் பங்கேற்றனர். மேலும், இந்தியா, ஈரான், பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து பல்வேறு சர்வதேச கல்வி நிபுணர்கள் மற்றும் ஆராய்ச்சிக் குழுக்கள் இணைந்து பங்குபெற்றனர்.

ஆய்வரங்குக்காக 110 இற்கும் மேற்பட்ட சுருக்கக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவை, சமூக அறிவியல், தொழில்நுட்பம், பொருளாதாரம், கல்வி மற்றும் மனிதவள மேம்பாடு போன்ற பல துறைகளை உள்ளடக்கியமை குறிப்பிடத்தக்கது.









# போதை விற்பனையுடன் தொடர்பான எட்டு பேர் சிலாபத்தில் கைதாகினர்!

## 18 மில்லியன் ரூபா பணமும் மீட்பு!!



(உடப்பு க.மகாதேவன்)

சிலாபம், தொடுவாவை பகுதியில் பொலிஸார் நடத்திய தேடுதல் நடவடிக்கையில், போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனை தொடர்பாக எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 18 மில்லியன் ரூபா பணம் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.





# ஆழ்கடலில் மீனவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு!

## கடற்றொழில் அமைச்சரிடம் அறிக்கை சமர்ப்பிப்பு

**(பழுவூரான், எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் வாழும் ஆழ்கடல் மீனவர்களின் மீன்கள் கடலில் கொள்ளையிடப்படுவது தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கையை திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை அரசியலமைப்புப் பேரவை உறுப்பினரும் மற்றும் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்களின் தலைவருமான ஏ. ஆதம்பாவா, மட்டக்களப்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவருமான கந்தசாமி பிரபு ஆகியோர் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரனைச் சந்தித்து வழங்கினர்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் மேஜர் ஜெனரல் ஓய்வு பெற்ற அருண ஜயசேகரவையும் சந்தித்து இது தொடர்பாக கலந்துரையாடினர்.

இதன்போது அது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படும் என்றும் அவர்களால் உறுதியளிக்கப்பட்டது.



# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக அருளுரையும் 2 லட்சம் ரூபா உதவியும்!

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வுகள் இன்று இடம்பெற்றன.

நிகழ்வில் ஆன்மீக அருளுரையாக மகாபாரதம் என்ற தொடர் சொற்பொழிவை ஆசிரியர் இரா.செல்வ வடிவேல் நிகழ்த்தினார்.

உதவித் திட்டங்களாக, வண்ணார்பண்ணை - கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, திருப்பணிச் செலவுக்காக திருப்பணிச் சபையிடம் 75 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

உடுவில் பிரஹறிஸ் இசை மன்றத்தின் கோரிக்கைக்கு அமைவாக, இசை வாத்தியங்கள் கொள்வனவுக்காக நிர்வாகத்திடம் 75 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, இமையாணன் முதியோர் சங்கத்தினர்களின் அங்கத்தவர்களுக்கு ஒரு தொகுதி மூக்கு கண்ணாடி வழங்குவதற்காக 40 ஆயிரம் ரூபா நிதி லயன்ஸ் கழக நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.

சுன்னாகம் அபிநயா கலைக் கழகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான கலைநிகழ்வுக்காக 15 ஆயிரம் ரூபா நிதி நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.








# விளக்குமாறு உற்பத்தி நிலையம் மாந்தை மேற்கில் திறந்து வைப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

ஐக்கியராச்சிய மன்னார் நலன்புரி சங்க நிதி அனுசரணையுடன் மாந்தை மேற்கில் 'வி கான்' மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் விளக்குமாறு உற்பத்தி நிலையம் புதன்கிழமை (21) வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் தொழில்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் கே.டி.அரவிந்தராஜ், வடமாகாண சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன், அடம்பன் பங்குத்தந்தை சீமான் அடிகளார், மன்னார் நலன்புரி அமைப்பு ஐக்கிய ராச்சியத்தின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதன், மன்னார் நலன்புரி அமைப்பு ஐக்கியராச்சியத்தின் பொருளாளர் தேவசகாயம் கில்மன் ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.

இதன்போது மாந்தை மேற்கு பிரதேச கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை திணைக்கள அதிகாரிகள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# கல்முனை பொதுச் சந்தையில் திடீர் சோதனை; நுகர்வுக்குப் பொருத்தமற்ற பொருள்கள் அழிப்பு!

(றியாஸ் ஆதம்)

பொது மக்களுக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்புமிக்க உணவைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் கல்முனை பிராந்தியத்தில் உள்ள வியாபார நிலையங்கள், உணவகங்களில் திடீர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைவாக கல்முனை பொதுச் சந்தை பகுதிகளில் நேற்று (22) திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ,எல்.எம்.லபீர் தலையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



இதன்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற பழுதடைந்த உருளைக் கிழங்கு உட்பட உணவுப் பொருள்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்டவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு திருத்த வழிமுறைகளுக்கு அமைவாக ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

# இந்தியா – பாகிஸ்தான் போர் நிறுத்தம் அமெரிக்காவினால் ஏற்படவில்லை

## எஸ்.ஜெய்சங்கர் மீண்டும் திட்டவட்டம்

இந்தியா– பாகிஸ்தான் இடையிலான போர் நிறுத்தம் சர்வதேச மத்தியஸ்தத்தால், குறிப்பாக அமெரிக்காவின் செல்வாக்கால் ஏற்படவில்லை என்று வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மீண்டும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து ஊடகம் ஒன்றுக்கு எஸ்.ஜெய்சங்கர் பேட்டி அளித்தார். அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,



“பாகிஸ்தானுக்கு எதிரான ஒபரேஷன் சிந்தூர் இன்னும் தொடர்கிறது. ஏனென்றால் அந்த நடவடிக்கையில் ஒரு தெளிவான செய்தி இருந்தது. ஏப்ரல் 22 ஆம் திகதி நாம் கண்டது போன்ற செயல்கள் (பஹல்காம் தாக்குதல்) நடந்தால், அதற்கு பதிலடி தரப்படும் என்பதுதான் அது. போர் நிறுத்த முயற்சி மே 10 ஆம் திகதி பாகிஸ்தான் இராணுவத்தால் தொடங்கப்பட்டது. போரை நிறுத்த தயாராக இருப்பதாக பாகிஸ்தான் இராணுவம் ஹொட்லைனில் கூறியது.

அதற்கு நாங்கள் எதிர்வினையாற்றினோம். போர் நிறுத்தம் முற்றிலும் இந்தியா – பாகிஸ்தான் பேச்சுவார்த்தையால் ஏற்பட்டது. சர்வதேச மத்தியஸ்தத்தால், குறிப்பாக அமெரிக்காவின் செல்வாக்கால் இது ஏற்படவில்லை. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ என்னிடம் பேசினார். பிரதமர் மோடியிடம் துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் பேசினார். அவர்களின் பங்கு கவலை தெரிவிப்பதாக மட்டுமே இருந்தது.

அமரிக்கா மட்டுல்ல, எங்களிடம் பேசிய அனைத்து நாடுகளுடனும் ஒரு விஷயத்தை நாங்கள் தெளிவாக கூறினோம். பாகிஸ்தான் போர் நிறுத்தம் செய்ய விரும்பினால் அதை அந்நாடு எங்களிடம் சொல்ல வேண்டும் என்பதுதான் அது. பாகிஸ்தான் ஜெனரல் நமது இராணுவ ஜெனரலை அழைத்து பேசிய பிறகே போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது.” என்று தெரிவித்துள்ளார்.

இந்தியா – பாகிஸ்தான் போர் நிறுத்தத்தில் தனது தலையீடு இருந்ததாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து கூறிவரும் நிலையில் அமைச்சர் ஜெய்சங்கர் அதனை மீண்டும் நிராகரித்துள்ளார்.

# பயங்கரவாதத்துக்கு ஆதரவளிப்பதை நிறுத்துமாறு பாகிஸ்தானை துருக்கி கடுமையாக வலியுறுத்தும்



## இந்தியா எதிர்பார்ப்பு

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை நிறுத்திவிட்டு, பயங்கரவாத சூழலுக்கு எதிரான நடவடிக்கையில் பாகிஸ்தானை ஈடுபடுமாறு துருக்கி கடுமையாக வலியுறுத்தும் என எதிர்பார்ப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறுகையில்,

“எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை நிறுத்தவும், பல தசாப்தங்களாக அது வளர்த்து வரும் பயங்கரவாத சூழலுக்கு எதிராக நம்பகமான நடவடிக்கைகளை எடுக்குமாறு, பாகிஸ்தானை துருக்கி கடுமையாக வலியுறுத்தும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஒருவருக்கொருவரின் கவலைகளின் உணர்திறன்கள் அடிப்படையில் உறவுகள் கட்டமைக்கப்படுகின்றன.

சிலிபி விவகாரம் இங்குள்ள துருக்கி தூதரகத்துடன் விவாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் குறிப்பிட்ட முடிவு சிவில் விமானப்போக்குவரத்து பாதுகாப்புத் துறையால் எடுக்கப்பட்டது என்பதை நான் புரிந்து கொள்கிறேன்.” என்று தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் உள்ள பயங்கரவாதிகளின் நிலைகள் மீது இந்தியா நடத்திய தாக்குதல்களைக் கண்டித்து துருக்கி கூறிய கருத்து, இந்தியா – துருக்கி இடையேயான உறவில் விரசல் ஏற்பட்டுள்ள நிலையில் இந்தியா இவ்வாறு தெரிவித்துள்ளது.

இந்தியாவுடனான இராணுவ மோதலின் போது பாகிஸ்தான் அதிக அளவில் துருக்கிய ட்ரோன்களைப் பயன்படுத்தியது.

இந்தச் செய்தியாளர் சந்திப்பின் போது ஜெய்ஸ்வால், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தோவால் மற்றும் சீன வெளியுறவுத்துறை அமைச்சர் இடையேயான மே 10 ஆம் திகதி சந்திப்புப் பற்றியும் கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

“நமது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால், சீன வெளியுறவு அமைச்சர் மற்றும் எல்லைதாண்டிய விவகாரங்களின் சிறப்பு பிரதிநிதி வாங் யி-யுடன் மே 10 ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, பாகிஸ்தானிலிருந்து வெளிப்படும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை தோவால் வெளிப்படுத்தினார்.

பரஸ்பர நம்பிக்கை, மரியாதை மற்றும் உணர்திறன் போன்றவை இந்தியா – சீனா உறவின் அடிப்படையாக உள்ளது என்பதை சீனா அறிந்திருக்கிறது.” – என்றார்.



# காவிரியிலிருந்து தமிழகத்துக்கு 40 டி.எம்.சி. நீர் திறக்க வேண்டும்

## காவிரி ஆணையம் உத்தரவு

காவிரியிலிருந்து தமிழகத்துக்கு 40 டி.எம்.சி. தண்ணீர் திறக்க வேண்டும் என காவிரி ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

காவிரி மேலாண்மை ஆணையத்தின் 40 ஆவது கூட்டம் அதன் தலைவர் எஸ்.கே. ஹால்தர் தலைமையில் டில்லியில் நேற்று நடைபெற்றது. இதில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரியை சேர்ந்த நீர்ப்பாசனத் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

தமிழக அரசின் சார்பில் நீர்வளத் துறை செயலாளர் ஜெயகாந்தன், காவிரி தொழில்நுட்ப குழு தலைவர் ஆர் சுப்பிரமணியம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் தமிழக அரசும் கர்நாடக அரசும் தங்களது வாதங்களை முன்வைத்தன. இதையடுத்து, தமிழக அரசின் வாதத்தை ஏற்றுகொண்ட காவிரி நீர் மேலாண்மை ஆணையத் தலைவர் எஸ்.கே.ஹல்தர்,

"உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி ஜூன் மாதத்தில் 9.19 டி.எம்.சி. நீரையும், ஜூலை மாதத்தில் 31.24 டி.எம்.சி. நீரையும் கர்நாடகா திறந்துவிட வேண்டும். மொத்தமாக 40.43 டி.எம்.சி. நீர் தமிழகத்துக்கு செல்வதை பிலிகுண்டுலு அளவை நிலையத்தில், கர்நாடக அரசு உறுதி செய்ய வேண்டும்." என உத்தரவிட்டார்.





# இந்தியாவின் வட மாநிலங்களில் புழுதிப்புயல்: உ.பிரதேசத்தில் ஒரே நாளில் 34 பேர் உயிரிழப்பு

டில்லி, உத்தர பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக வெப்பத்தில் தகித்து வந்த டில்லி – என்.சி.ஆர் பகுதிகளில் புழுதி காற்றுடன் ஆலங்கட்டி மழை பெய்துள்ளது. மழை பாதிப்பால் இருவர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.

நீண்ட நாள்களாக டில்லியில் வெப்பம் அதிகரித்து வந்த நிலையில், தற்போது பெய்துள்ள மழையால் பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பலத்த காற்று வீசி வருவதால் நொய்டாவுக்கு அருகே உள்ள பகுதிகளில் மரங்கள் வேருடன் பெயர்ந்து வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களின் மீது விழுந்தன. இதனால், பல இடங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அத்துடன் மின் இணைப்புகளும் துண்டிக்கப்பட்டன.

டில்லியிலிருந்து ஸ்ரீநகர் புறப்பட்ட இண்டிகோ விமானத்தின் முன்பகுதி ஆலங்கட்டி மழையால் சேதமடைந்தது. மேலும், டில்லி விமான நிலையத்தில் உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. 12 விமானங்கள் ஜெய்ப்பூருக்கும், ஒரு சர்வதேச விமானம் மும்பைக்கும் திருப்பி விடப்பட்டது. இதனிடையே, இந்திய வானிலை மையம், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இடியுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

உத்தர பிரதேசத்தில் காலநிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மாநிலத்தின் பல பகுதிகளில் கடந்த 24 மணி நேரத்தில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்தது. இதில், 34 பேர் உயிரிழந்தனர். குறிப்பாக, காஸ்கஞ்ச், பதேபூர் பகுதிகள் கனமழையால் மிகவும் மோசமாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. புயல் தொடர்பான சம்பவங்களால் இப்பகுதிகளில் 5 பேர் உயிரிழந்தனர். கட்டடங்கள், மரங்கள் பெயர்ந்து விழுந்ததில் வீதிகளில் போக்குவரத்து முடங்கியது. அதனை சீரமைக்கும் பணிகளில் உள்ளூர் நிர்வாகத்தினர் போர்க்கால அடிப்படையில் ஈடுபட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் பெண்களும் தோள் கொடுத்தனர்

## பி.எஸ்.எப். உயர் அதிகாரி பாராட்டு

ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் பெண்களின் பங்கு குறித்து எல்லை பாதுகாப்பு படை (பி.எஸ்.எப்) டி.ஐ.ஜி. வரீந்தர் தத்தா பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது நாங்கள் எதற்கும் தயாராக இருந்தோம். அக்னூரில் எதிரிகள் எங்கள் நிலைகளை தாக்கத் தொடங்கியவுடன், நாங்கள் கடுமையான தாக்குதல் நடத்தி, அவர்களின் எட்டு நிலைகளை அழித்தோம். அவர்களின் வான்வழி கண்காணிப்பு அமைப்பையும் ஒரு ஏவுதளத்தையும் அழித்தோம்.

இந்தத் தாக்குதலில் பெண்கள் தங்கள் ஆண் சகாக்களுடன் தோளோடு தோள் நின்றனர். தாங்கள் சக்தியின் மறுவடிம் என்பதை நிரூபித்தனர். எங்களின் ஒரு பெண் கமாண்டர் எதிரியின் ஒரு நிலையை முற்றிலுமாக அழித்தார்.

சம்பாவில் உண்மையான வீரர்களாக பெண்கள் போரிட்டனர். அவர்கள் தங்களின் அனைத்து பொறுப்புகளையும் திறம்பட நிறைவேற்றினர். எல்லைக்கு அப்பாலிருந்து தாக்குதல் அதிகரித்தவுடன் பட்டாலியன் தலைமையகத்தை இடம் மாற்றிக்கொள்ளும் வாய்ப்பு இருந்தும் அவர்கள் பின்வாங்கவில்லை. அவர்கள் அங்கிருந்தே தங்கள் கடமைகளை நிறைவேற்றி தங்கள் தகுதியை நிரூபிக்க தயாராக இருந்தனர்.““ – என்றார்.

கனடா முரசு

பக்கங்கள் - 4

வெள்ளிக்கிழமை | 23/05/2025


## சர்வதேச மாணவர்களுக்கான கல்வி அனுமதியில் மாற்றம்



C2 ▶



# கனடா பிரதமர் மார்க் கார்னியின் பிரதான ஆலோசகர் இராஜினாமா

கனடா பிரதமர் மார்க் கார்னியின் அலுவலகத்தில் முக்கிய ஆலோசகராக உள்ள மார்கோ மெண்டிசினோ, இந்த கோடையில் தனது பதவியை விட்டு விலக உள்ளார் என அதிகாரப்பூர்வ அறிக்கை வெளியாகியுள்ளது.

"நாங்கள் அக்கிராசன உரைக்கு தயாராகும் போது, நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் பணிகளைத் தொடங்கும் முக்கிய கட்டத்தில் மேண்டிசினோ தொடர வேண்டும் என கோரியதாகவும், அவர் ஒப்புக்கொண்டதில் நன்றி," எனவும் பிரதமர் கார்னி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மெண்டிசினோ, முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அரசு காலத்தில் பொது பாதுகாப்பு அமைச்சராகவும், அதற்கு முன் குடிவரவு அமைச்சராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மார்ச் மாதம் லிபரல் தலைமை தேர்தலில் கார்னி வெற்றி பெற்று பிரதமராக பதவியேற்றபோது, தற்காலிக அடிப்படையிலான ஆலோசகராக மெண்டிசினோ நியமிக்கப்பட்டார். ஆனால், இதை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்தன.

மெண்டிசினோ தனது பதவியை விட்டு விலகும் பின்னணியில், அவர் டொரொன்டோவின் அடுத்த மேயராக போட்டியிடும் வாய்ப்பு அதிகமாகியுள்ளது.

# 'கோல்டன் டோம்' ஏவுகணைத் திட்டத்தில் கனடாவும் முதலீடு செய்யும் வாய்ப்பு

## பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ள 175 பில்லியன் டொலர் மதிப்பிலான 'கோல்டன் டோம்' ஏவுகணை பாதுகாப்பு திட்டத்தில், கனடாவும் முதலீடு செய்யும் வாய்ப்பு உள்ளது என கனேடிய பிரதமர் மார்க் கார்னி கூறியுள்ளார்.

கோல்டன் டோம் என்பது தரை மற்றும் விண்வெளி அடிப்படையிலான ஏவுகணை கேடய அமைப்பாகும், இது ஏவுகணைகளை பல கட்டங்களில் கண்டறிந்து, கண்காணித்து நிறுத்தவும் புறப்படுவதற்கு முன் அவற்றை அழிக்க அல்லது நடுவானில் இடைமறிக்கும் திறனை கொண்டது.

இந்த புதிய அமைப்பு அமெரிக்காவின் வெற்றிக்கும் C2 ▶



# சர்வதேச மாணவர்களுக்கான கல்வி அனுமதியில் மாற்றம்

சர்வதேச மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி அனுமதியானது கனடா நிர்வாகத்தால் சமீப காலமாக தொடர்ந்து மாற்றத்திற்கு உட்பட்டு வருகிறது.

மிக சமீபத்தில் வெளியான தரவுகளின் அடிப்படையில், 2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், 30,640 அனுமதிகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது, இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தை விட கிட்டத்தட்ட 31 சதவீதம் குறைவு.

2024ல் வெளிநாட்டு மாணவர்களுக்கு என 44,295 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து கனேடிய அரசாங்கம் முன்னெடுத்துவரும் முயற்சிகளைத் தொடர்ந்து, சர்வதேச மாணவர் சேர்க்கை குறைந்து வரும் பரந்த போக்கின் ஒரு பகுதியாக இந்தச் சரிவு காணப்படுகிறது.

2023 இல் கனடா மொத்தம் 681,155 கல்வி அனுமதிகளை வழங்கியது, அவற்றில் 278,045 இந்தியர்கள். 2024 ஆம் ஆண்டில், மொத்த அனுமதிகளின் எண்ணிக்கை 516,275 ஆகக் குறைந்தது, இந்திய மாணவர்கள் எண்ணிக்கை 188,465 ஆகக் குறைந்தது.

வீட்டுவசதி பற்றாக்குறை, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து உள்கட்டமைப்பு மீதான அழுத்தம் ஆகியவற்றிற்கு ஓரளவு காரணம் என்று கூறப்படும் பதிவு செய்யப்பட்ட குடியேற்றத்திற்கு பதிலளிக்கும் விதமாக கனேடிய அரசாங்கம் கொள்கை மாற்றங்களைச் செயல்படுத்தியுள்ளது.

தற்போதைய பிரதமர் மார்க் கார்னியின் கொள்கை முடிவு என்னவென்றால், மாணவர்கள் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்கள் உட்பட தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை என்பது 2028 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் மக்கள் தொகையில் 5 சதவீதமாக இருக்க வேண்டும் என்பதே.

இதனை அமுலுக்கு கொண்டு வரும் நோக்கில் 2025 ஆம் ஆண்டுக்கான கல்வி அனுமதி என்பது 437,000 என ஐசுஊஊ முடிவு செய்துள்ளது. மட்டுமின்றி, படிப்பு அனுமதி விண்ணப்பங்களுக்கான புதிய தேவைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அதாவது 2024 ஜனவரி 1ம் திகதி முதல் போதுமான நிதி கையிருப்பை நிரூபிக்க வேண்டும். இதுவரை 10,000 கனேடிய டொலர் என இருந்தது, தற்போது 20,635 கனேடிய டொலர் என அதிகரித்துள்ளனர்.

அத்துடன், கல்வி நிலையத்தில் இருந்து ஒப்புதல் கடிதமும் பெற்றிருக்க வேண்டும். கல்வி விண்ணப்பத்திற்கான கட்டணம் 150 கனேடிய டொலர் என்றும், இதர செலவுகளுக்கு என 85 கனேடிய டொலரும் செலுத்த வேண்டும்.

---

## ‘கோல்டன் டோம்’...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்வாழ்விற்கும் மிகவும் முக்கியமானது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், ட்ரம்ப்பின் ‘கோல்டன் டோம்’ திட்டத்தில் கனடாவும் முதலீடு செய்யும் வாய்ப்பு உள்ளது என கனேடிய பிரதமர் மார்க் கார்னி கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கனடா மற்றும் கனேடியர்களின் பாதுகாப்பு தேவைகளுக்கும் இந்த திட்டத்தில் இணைவது என்பது நல்ல யோசனைதான்.

Golden Dome என்பது இஸ்ரேலின் ஐசழுெ னுழஅந திட்டத்தினைப் போல உருவாக்கப்படும் ஒரு பாரிய வான்வழி பாதுகாப்பு அமைப்பு ஆகும்.

ஆனால் இது குறுகிய தூரத்தில் மட்டும் செயல்படும் Iron Dome-ஐ விட மிகவும் மேம்பட்டதாக இருக்கும்.

இது, hypersonic, space-based மற்றும் அணு ஆயுதம் தாங்கிய ஏவுகணைகள் உள்ளிட்ட பலவகை தாக்குதல்களை எதிர்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்படுகிறது.

நாம் விரும்பினால், அமெரிக்காவின் Golden Dome திட்டத்தில் முதலீடு செய்து பங்கேற்க முடியும். இது குறித்த உயர் நிலை பேச்சுவார்த்தையில் ஏற்கனவே விவாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், ட்ரம்புடன் சில முறை இந்த திட்டம் குறித்து பேசியுள்ளேன்.” என தெரிவித்துள்ளார்.



# மார்க் கார்னி எப்போது வேண்டுமானாலும் ட்ரம்பிடம் பேசலாம்; அமெரிக்கத் தூதர் கருத்து

அடுத்த வாரம் கனடா பயணிக்கும் மன்னர் சார்லஸ், கனடா நாடாளுமன்றத்தைத் துவக்கிவைக்க இருக்கிறார்.

சுமார் 67 ஆண்டுகளுக்குப் பின், மன்னர் சார்லஸ் கனடா நாடாளுமன்றத்தைத் துவக்கிவைக்க இருப்பதற்கு ஒரு முக்கிய காரணம் உள்ளது.

அதாவது, அமெரிக்க ஜனாதிபதியான ட்ரம்ப், மன்னரின் ஆட்சியின் கீழிருக்கும் கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கப்போவதாக வெளிப்படையாகவே சொல்லிக்கொண்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட ஒரு சூழலில், கனடா இன்னமும் மன்னரின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. கனடா விற்பனைக்கு அல்ல என்பதை ட்ரம்புக்கு சொல்லாமல் சொல்வதற்காகவே மன்னர் சார்லஸ் கனடா வருவதாக கருதப்படுகிறது.

இந்நிலையில், மன்னர் வருகை குறித்து கருத்து தெரிவித்துள்ள கனடாவுக்கான அமெரிக்க தூதரான பீற் (Pete Hoekstra), அதற்கு மன்னர் எதற்கு? கனடா பிரதமரே போதுமே என்கிறார்.

அதாவது, மன்னர் சார்லஸ் கனடா வருவதை நாங்களும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். ஆனால், கனடா வரும் மன்னரின் நோக்கம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு ஒரு செய்தியைச் சொல்வதற்காக என்றால், அதற்கு மன்னர் எதற்கு, கனடா பிரதமரான மார்க் கார்னியே போதுமே என்கிறார் பீற்.

ட்ரம்புக்கு செய்தி ஒன்றைச் சொல்வதற்காகவே மன்னர் கனடாவுக்கு வருகிறார் என்றால், செய்தி அனுப்புவதற்கு எளிமையான வழிகள் உள்ளன என்கிறார் பீற்.

மார்க் கார்னி என்னிடம் தொலைபேசியில் பேசலாம். அவர் எப்போது வேண்டுமானாலும் ட்ரம்பிடம் பேசலாம் என்று கூறியுள்ளார் பீற்.

இன்னொரு விடயம், இப்போது எங்களுக்கு அதற்கெல்லாம் நேரமில்லை என்றும் கூறியுள்ளார் பீற்.

கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பது குறித்து கனேடியர்கள் பேச விரும்பினால் அது அவர்கள் விருப்பம்.

எனக்கு அதைக் குறித்து பேச நேரமில்லை என்று கூறும் பீற், ட்ரம்பும் அதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கவில்லை, எங்களுக்கு வேறு நிறைய வேலைகள் உள்ளன.

நாங்கள் அமெரிக்காவின் செழிப்பையும், பாதுகாப்பையும் அதிகரிப்பதில் கவனம் செலுத்திவருகிறோம் என்றும் பீற் கூறியுள்ளார்.






# டொரோண்டோவில் வெள்ள அபாயம்

கனடா சுற்றுச்சூழல் துறை டொரோண்டோ நகரில் தீவிர மழை எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

இன்று மாலை வரை நகரின் சில பகுதிகளில் அதிகபட்சமாக 60 மில்லி மீற்றர் மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று முற்பகலில் மட்டுமே சுமார் 35 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது.

மேலும், டான் வேலி பார்க்வேக்கு கிழக்கில் உள்ள பகுதிகளில் கூடுதல் 20 மில்லி மீற்றர் மழை இன்னும் பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலை நேரத்தில் மழை குறைந்து வரும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அதிக மழை காரணமாக சாலைப் பகுதிகளில் தண்ணீர் தேங்கி நிற்கும் நிலை மற்றும் விரைவான வெள்ளம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிய ஆறுகள், சுனைகள் மற்றும் தாழ்வான இடங்களில் உள்ள குடியிருப்புகள் வெள்ள அபாயத்தில் உள்ளன.

நதிகள் மற்றும் வாய்க்கால்கள் அருகே நிலச்சரிவுகளும் ஏற்படலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இன்று அதிகபட்ச வெப்பநிலை 11 பாகை செல்சியஸை கடக்காது என தெரிவிக்கப்படுகின்றது.

